# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2111- 2019 පෙබරවාරි මස 15 වැනි සිකුරාදා - 2019.02.15

*2111 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி* III *– காணிகள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | 38 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 40 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2019, மாச்சு மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


37- B 81494 - 353 (2019/02)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உபபிரிவுக்கேற்ப 1982 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29 ஆந் திகதி இராஜாங்கனை வலது பாதை 16 இல் வசிக்கும் மிரிஹாகல்ல கங்கானம்கே ஏடின் சிங்கா என்பவருக்கு அனு/பிர/1451ஆம் இலக்க அளிப்பின் கீழ் பராதீனம் செய்யப்பட்ட அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1982.06.10 ஆந் திகதி 1445 ஆம் இலக்கப் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்க் காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட காணிக்கு சட்ட ரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால் /இருக்கும் வாரிசு பின்னுரிமை வாரிசாக விருப்பமில்லை என ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பிஹிலிஎலே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான் இத்தால் அறியத்தருகின்றேன். ஆதலால் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் மேற்கூறிய அளிப்பை இரத்துச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந் நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2019.03.08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்திலான சமர்ப்பணம் மூலம் எனக்கு தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 01 ஆம் இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் இ.கு.வ. 11 ஆம் இலக்க துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இ.கு.வ. 11 ஆம் இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 156 எனக் காட்டப் பட்டுள்ளதும், அநுராதபுரம் நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட இராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த இராஜாங்கனை குடியேற்றம் 5B யிலுள்ள கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த இராஜாங்கனை வலது பாதை 16 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 00 ஏக்கர், 02றூட் , 03 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ள அரச காணி . இதன் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு: காணித்துண்டு இலக்கம் 159;
கிழக்கு: காணித்துண்டு இலக்கம் 166 மற்றும் 170 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 154;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 155.

பீ.ஜீ.சுனில் அபேகோன் ,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
ராஜாங்கனை,
2018.11.12.

2 - 620/1

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வட மத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பிஹிலி எலே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத் திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின்கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1995.12.20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள அநு/ ராஜா/பி/1128ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான ராஜாங்கனை, வட்டார இலக்கம் 4 எனும் முகவரியில் வசிக்கும் சந்ரதாச வீரசிங்ஹ தஹநாயக்க என்பவருக்கு கையளிக்கப்பட்டு அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 6864 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.09.06 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு சட்ட ரீதியான பின்னுரித்தாளராக ஒருவரை நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ள போதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்னை காரணமாக பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன் . இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.03.08 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

அநுராதபுரம் மாவட்டத்தில் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின் எப்பாவள கோரளே, இல. 445 கிராம அலுவலர் பகுதியில் உள்ள வட்டார இலக்கம் 04 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் தலைமை அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்டு அவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதுமான 01 ஆம் இலக்கக் களத்தாளில் 427 ஆம் இலக்க இ.கி.வ. உருவப்படத்தில் 90 ஆம் இலக்கக் காணித்துண்டெனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான 02 ஏக்கர் 17 பேர்ச்சஸ் பரப்பளவுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு ( வயல் நிலம்) :

வடக்கு: இல. 67 கால்வாய் ஒதுக்கம்;
கிழக்கு: 89 ஆம் இலக்கக் காணி ;
தெற்கு: 104 ஆம் இலக்க நீர்ப்பாசனக் கால்வாய்;
மேற்கு : 91 ஆம் இலக்கக் காணி.

பீ.ஜீ.சுனில் அபேகோன் ,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
ராஜாங்கனை,
2018.12.07.

2 - 620/2

இணைப்பு 9

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வட மத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பிஹிலிஎலே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1995.12.20 ஆந் திகதி வழங்கப் பட்டுள்ள அநு/ராஜா/பி/1124 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான ராஜாங்கனை, வட்டார இலக்கம் 4 எனும் முகவரியில் வசிக்கும் பரணகே பின்தியஸ் அப்பு என்பவருக்கு கையளிக்கப்பட்டு அநுராதபுரம் மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் 5776 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.08.27 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்ட ரீதியான பின்னுரித்தாளராக ஒருவரை நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் இருந்தும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப் படவில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன் . இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.03.08 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

அநுராதபுரம் மாவட்டத்தில் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின் எப்பாவள கோரளே, இல. 445 கிராம அலுவலர் பிரிவில் உள்ள திம்பிரிவெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவை அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்டு அவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதுமான 03 ஆம் இலக்கக் களத்தாளில் 432 ஆம் இலக்க இ.கி.வ. வரைபடத்தில் 414 ஆம் இலக்கக் காணித்துண்டெனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான 02 றூட் பரப்பளவுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு (மேட்டு நிலம்) .

வடக்கு: பாதை ஒதுக்கம்;
கிழக்கு: இலக்கம் 415 மேட்டு நிலம் ;
தெற்கு : கால்வாய் மற்றும் பாதை ஒதுக்கம்;
மேற்கு : இலக்கம் 413 மேட்டு நிலம்.

பீ.ஜீ.சுனில் அபேகோன் ,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
ராஜாங்கனை,
2018.12.17.

2 - 620/3

இணைப்பு 9

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வட மத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பிஹிலிஎலே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1982.10.13 ஆந் திகதி வழங்கப் பட்டுள்ள அநு/ராஜா/பி/1889 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான ராஜாங்கனை, வட்டார இலக்கம் 4 எனும் முகவரியில் வசிக்கும் அஹங்கமகே கருணாவதி சரத் விஜேசிங்ஹ என்பவருக்கு கையளிக்கப்பட்டு அநுராதபுரம் மாவட்டப் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் 7406 ஆம் இலக்கத்தின் கீழ் 1992.12.14 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப் பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்ட ரீதியான பின்னுரித்தாளராக ஒருவரை நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் இருந்தும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன் . இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.03.08 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

அநுராதபுரம் மாவட்டத்தில் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின் எப்பாவள கோரளே, இல. 445 கிராம அலுவலர் பகுதியில் உள்ள வட்டார இலக்கம் 04 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 80 ஆம் இலக்கக் காணித்துண்டெனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான 02 ஏக்கர் பரப்பளவுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு ( வயல் நிலம்) :

வடக்கு: நீர்ப்பாசனக் கால்வாய் ஒதுக்கம்;
கிழக்கு: 79 ஆம் இலக்கக் காணி ;
தெற்கு: பாதை ஒதுக்கம்;
மேற்கு: 81 ஆம் இலக்கக் காணி.

பீ.ஜீ.சுனில் அபேகோன் ,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
ராஜாங்கனை,
2018.12.17.

2 - 620/4

இணைப்பு 9

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ராஜபக்சகே திலின பிரதீப் சுமனசேகர ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 2000.08.30 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/ அகோ/ 2174 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான அம்பகமுவ , உடபுலத்கம எனும் முகவரியில் வசிக்கும் வீரசிங்கசே கருணாதாச என்பவருக்கு கையளிக்கப்பட்டு கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன் . இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.03.15ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

#### அட்டவணை

நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ கோரளை பிரதேசச் செயலாளர் பிரிவின் அம்பகமுவ பற்றில்/ கோரளேயிலுள்ள, அம்பகமுவ தெற்கு, கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அம்பகமுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு இ.கி.வ. 101 அதிரேகை வரைதலில் 07 ஆம் இலக்கக் காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 435 ஆம் இலக்க காணி எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.045 ஹெக்டேயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு,
காணியின் பெயர்: பிளக்ஸ்டோன் கொலனி .

வடக்கு: காணித்துண்டு இலக்கம் 433, 428, மற்றும் 434;
கிழக்கு: காணித்துண்டு இலக்கம் 434,மற்றும் 437 1/2;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 437 1/2, மற்றும் ஜனபதய கொலனி 432;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 432, ஜனபதய கொலனி மற்றும் 433.

ஆர்.டி.பி. சுமனசேகர ,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
அம்பகமுவ கோரளே,
கினிகத்ஹேன.
2018.10. 19.

2 - 618

---

## நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/37273.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : இ.கோ/14/தீ.ப/எல்/18

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காலி மாவட்டம், எல்பிடிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 26E, இகலகலாவ கிழக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பன்கன்வில எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் கிராம அலுவலரின் வரைபடத்தில் காட்டப்பட்ட சுமார் 02 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை விவசாய நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திரு. வெய்கனே லியனகே சுனில் சாந்த என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : திரு. W.L. நிகால் என்பவருடைய காணி;
கிழக்கு : திருமதி K.W. தயாவதி என்பவருடைய காணி ;
தெற்கு : திருமதி B.V. லுசினோனா என்பவருடைய காணி;
மேற்கு : திரு. ஹெண்டி குருசிங்க என்பவருடைய காணி .

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம். (முதலாம் தவணை)-** இருபத்தியிரண்டு (22) வருடங்கள் (1995.06.15ஆந் திகதி தொடக்கம் 2017.06.14 ஆந் திகதி வரை);

**வருடாந்தக் குத்தகை.**-பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆண்டுக்கான காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்து ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50% இற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

தண்டப்பணம்.- 1995 ஆம் ஆண்டு முதல் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதி 12% தொகை தண்டப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
குத்தகைக் காலம் (இரண்டாம் தவணை).- முப்பது வருடங்கள் (30) ( 2017.06.15 ஆந் திகதி தொடக்கம் 2047. 06.14 வரை)
**வருடாந்தக் குத்தகை.**-பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு செய்யப்பட்ட 2017 ஆம் ஆண்டுக்கான காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 4%

வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் ஆயினும் திருத்தியமைக் கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்து ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 % இற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி பயிர்செய்யும் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேசச் செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2019.01.10ஆந் திகதியிலிருந்து குறைந்தது 5 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும் இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றத்திற்கு விடுதல் அனுமதிக்கப்படமாட்டாது ;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இவ்வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

(திருமதி) நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்( காணி),
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019.02.15.

2- 490

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/56729.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. :பீஎல்பீ/இ6/இ9/பள்/தீப 2-1 .

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், பள்ளம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல.662/டீ, பெரியமடுவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பரப்பன் தொட்ட எனும் கிராமத்தில் அமைந்துள்ள எப்.வீ.பி 1826ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 25 எனக் காட்டப்பட்டுள்ள 24 ஏக்கர் 00றூட் 39 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக, விவசாய நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு திரு. பெர்னாந்து வீரமுண்டகே அன்டனி கிரேஷியன் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 26;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 36;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 38;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 24.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது வருடங்கள் ( 2018.10.26ஆந் திகதி தொடக்கம்);

**வருடாந்தக் குத்தகை**.-குத்தகை செயற்படுத்தப் படுகின்ற வருடத்திற்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு ( ரூபா 5, 000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் , காணியின் சந்தைப் பெறுமதியில் 2% குத்தகை செயற்படுத்தப்படுகின்ற வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு ( ரூபா5, 000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இந்தக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்து ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20 % கூட்டி வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைப்பணம்.- அறவிடப்படமாட்டடது;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளர் /மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர்ரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக, விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேசச் செயலாளர் , மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப்பட மாட்டாது ;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இவ்வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

வை.வை.என்.பெரேரா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019.02.15.

2- 619

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/58245.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : NP/ 28/ LB/ LS/ BAT/ KPN/ 15.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டம், கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல.213, கதிரவெளி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த புதூர் எனும் கிராமத்தில் அமைந்துள்ள MAD/ KRP/(N) 2012/ Llcd.019 ஆம் இலக்க களவரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் A,B & D எனக் காட்டப்பட்டுள்ள 6.6241 ஹெக்டேயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு அல்ஹெமிமெட்டல் பிறைவேட் லிமிட்டட் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

**காணித்துண்டு இலக்கம் :** A

வடக்கு : பாதை;
கிழக்கு : பாதை ( பிரதேச சபை);
தெற்கு : கடற்கரைப்பாதை ;
மேற்கு : வரைபட இல. B.S.V.P. 48 இன் கா.து. இல. 152 மற்றும் கா.து. இல. 167,162, 158,156.

**காணித்துண்டு இலக்கம் :** B

வடக்கு : பாதை;
கிழக்கு : பாதை ( பிரதேச சபை);
தெற்கு : கடற்கரைப்பாதை ;
மேற்கு : வரைபட இல. B.S.V.P. 48 இன் கா.து. இல. 169 மற்றும் கா.து. இல. 48,49, 30,29, 171.

**காணித்துண்டு இலக்கம் :** C

வடக்கு : வரைபட இல. B.S.V.P. 48 இன் கா.து. இல. 18, 23, 22, மற்றும் 19;
கிழக்கு : வரைபட இல. B.S.V.P. 48 இன் கா.து. இல. 19, 20, 21, மற்றும் 34;
தெற்கு : வரைபட இல. B.S.V.P. 48 இன் கா.து. இல. 35, 22, 36, மற்றும் 24 ;
மேற்கு : பாதை ( பிரதேச சபை).

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது வருடங்கள் ( 2019.02.06ஆந் திகதியிலிருந்து 2049. 02. 05 ஆந் திகதி வரை);

**வருடாந்தக் குத்தகை.**-2019 ஆம் ஆண்டு காணியின் மதிப்பீட்டு பெறுமதியானது ரூபா ஐந்து மில்லியனை விட (ரூபா 5,000,000.00) குறையும் சந்தர்ப்பங்களில், பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான சந்தை பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை விட
(ரூபா5,000,000.00) தாண்டும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியில் 4% ஆகும். இக் குத்தகைப் பணமானது எல்லா ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை திருத்தியமைக்கப்பட வேண்டும் என்பதுடன் அதன் முந்தைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்தக் குத்தகைப் பணத்திற்கு 20 % சேர்க்கப்பட வேண்டும்.

தவணைப்பணம்.- அறவிடப்படமாட்டடது;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதி யிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளர் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேசச் செயலாளர் , இலங்கை முதலீட்டுச் சபை, மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2019.02.06 ஆந் திகதியிலிருந்து 05 வருடகாலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும் இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்படமாட்டாது ;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இவ்வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஜி. பிரணவன்,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
''மிஹிகத மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019.02.15.

2- 879

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.